T-UN-660

தமிழ்ப் பல்கலைக் கழகச்
செய்தி மலர்

மலர் 2 திருவள்ளுவராண்டு 2014 மார்கழி 30
14-1-84 இதழ் 10

களஞ்சியம் பற்றி முதல்வர்

'அதிகம் படிக்காத எழுதமட்டுமே தெரிந்த மக்களும் புரிந்துகொள்ளும்வகையில் - சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் அகராதி இருக்க வேண்டும்.

—களஞ்சியமையக் கூட்டத்தில்
மாண்புமிகு தமிழக முதல்வர்.

இட ஒதுக்கீடு கருத்தரங்கு

இந்தியப் பல்கலைக் கழகங்களின் இணையமும் தமிழ்ப் பல்கலைக் கழகமும் சேர்ந்து, 'சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்குப் பல்கலைக் கழகக் கல்வியில் இட ஒதுக்கீடு செய்வதை எதிரிடும் சிக்கல்கள்' என்னும் பொருள்பற்றி, தஞ்சையில் நடத்திய கருத்தரங்கில் பல முடிவுகள் நிறைவேற்றப்பட்டன. அவற்றில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

தகுதியும் மதிப்பெண்களுமுடையவர்களுக்கு இட ஒதுக்கீட்டினால் இசைவு மறுக்கப்படுமானால் கல்வி நிறுவனப் பொறுப்பாளர்கள் இடங்களின் எண்ணிக்கையைப் பெருக்க வேண்டும். நலிவடைந்த பிரிவினர் வாழும் பகுதிகளிலுள்ள கல்விநிலையங்களின் நிலையை உயர்த்தவேண்டும். பொதுப்பிரிவில் தேர்வுபெறும் நலிவடைந்த பிரிவு மாணவர்களுக்கு ஊக்கத்தொகை அளிக்கப்படவேண்டும். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் நலிவடைந்த பிரிவு மாணவர்களுக்குத் தாய்மொழியிலோ வட்டாரமொழியிலோ கல்வி கற்பிக்க வேண்டும். கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களும் நலிவடைந்த பிரிவினர் வாழும் பகுதிகளில் விரிவாக்கப் பணி செய்யவேண்டும். தமிழக முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் போன்றதிட்டங்கள் வகுக்கப்பட்டால் படிப்பை இடையில் விட்டு விடுவோர் தொகை மிகவும் குறைந்து, காலப்போக்கில் இட ஒதுக்கீடு முறையே தேவையற்றதாகிவிடும்.

ஏறத்தாழ இருபத்தேழு கல்வித்துறை அறிஞர்கள் கலந்துகொண்ட இக்கருத்தரங்கு தஞ்சை, சங்கீத மகாலில் திசம்பர் 14,15 நாள்களில் சிறப்பாக நடைபெற்றது. திரு பி. எசு. அபீப்முகமது, திருவனந்தபுரம்; டாக்டர் அறம், காந்திகிராமம்; டாக்டர் டி. என். செயச்சந்திரன், கேரளா; பேராசிரியர் எசு. வி. சிட்டிபாபு, அண்ணாமலைநகர்; டாக்டர் பி. வி. இந்திரேசன், சென்னை; டாக்டர் என். கே. புரோகித், கரக்பூர்; டாக்டர் பி. கே. மிஸ்ரா, உதகை; டாக்டர் அஞ்சனிகுமார், இணைச்செயலாளர், இந்தியப் பல்கலைக் கழக இணையம்; பேராசிரியர் வேதமணி மானுவேல், திருவனந்தபுரம்; டாக்டர் சதாசிவா, மைசூர்; டாக்டர் சி. எம். ஆபிரகாம், கோவை; திரு கோ. சிவகுருநாதன், தமிழ்நாடு புதிய பல்கலைக் கழகங்களின் தனி அலுவலர்; டாக்டர் வ. அய். சுப்பிரமணியம், தஞ்சை; டாக்டர் எசு. எசு. தேக்கமலை தஞ்சை மற்றும் பல அறிஞர்கள் இக் கருத்தரங்கில் பங்கு கொண்டனர்.

இக்கருத்தரங்கின் துவக்க விழா உரையாற்ற விருந்த, தமிழ்ப் பல்கலைக் கழக இணைவேந்தர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் இன்றியமையாத பணியின் பொருட்டுச் சென்னை சென்றுவிட்டதால் அவருடைய தொடக்க உரையைப் புதிய பல்கலைக் கழகங்களின் தனி அலுவலர் திரு கோ. சிவகுருநாதன் படித்தார். துவக்க உரையில் முதலமைச்சரின் சத்துணவுத்திட்டம் பற்றியும், தாய்மொழிக்கல்வியால் தமிழ்நாட்டில் நலிவடைந்த பிரிவு மாணவர்கள் எவ்வாறு பயனடைந்துள்ளார்கள் என்பது பற்றியும் எடுத்துரைத்தார். வரவேற்புரை நிகழ்த்திய தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் இட ஒதுக்கீட்டின் இன்றியமையாமையை வலியுறுத்தினார். இ. ப. இ. செயலாளர் டாக்டர் அஞ்சனிகுமார் நன்றி நவின்றார்.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சீன மாணவர்

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் நாலந்தா பல்கலைக் கழகத்தில் சீனாவிலிருந்து வந்த கியூன்சாங் (Hiuen - Tsang) தங்கி யோக சாத்திரம் முதலியவற்றைக் கற்றதாக வரலாறு எடுத்துரைக்கிறது. இன்று தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குச் சீனாவிலிருந்து வாங் பாவ் சீ (Wang Bao Shi) என்பார் தம் தமிழறிவைப் பெருக்கிக்கொள்ள வந்துள்ளார்.

நான்காண்டுகள் பீகிங்கில் தமிழில் பேசவும், படிக்கவும், எழுதவும் கற்றுக்கொண்ட வாங் பாவ்சீ இப்போது தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பேச்சுத் தமிழைக் கற்றுவருகிறார். தமிழ், உலகிலுள்ள பழம்பெரும் மொழிகளில் ஒன்றாகஇருந்தபோதிலும் தமிழ் அண்மைக்காலத்தில்தான் சீனாவில் பரவத் தொடங்கியுள்ளது என, திரு வாங் பாவ் சீ குறிப்பிட்டார். 1950ஆம் ஆண்டில் சீன அரசு இரு மாணவர்களைத் தமிழ்மொழி கற்க அனுப்பியது. 1960ஆம் ஆண்டிற்குப் பின்னர்தான் சீனாவில் தமிழ் மொழி பரவத் தொடங்கியது.

சீனாவின் உயர்கல்வி நிறுவனங்களில் ஒன்றான பீகிங் ஒலிபரப்புக் கல்லூரி, தமிழ் கற்பிக்க இரு ஆசிரியர்களை வரவழைத்தது. அவர்களிடம் இருபது மாணவர்கள் தமிழ் கற்றனர். நான்காண்டுகள் தமிழ் படித்தபின் அவர்கள் அரசுத்துறை-களுக்கு அனுப்பப்பட்டனர். அவர்களில் பத்து பேர் பீகிங் வானொலியின் தமிழ்த்துறையில்பணியமர்த்தப்பட்டனர். பீகிங் வானொலி 1-8-1963 -இல் தமிழ் ஒலிபரப்பைத் தொடங்கியது. 1964-இல் பீகிங் வானொலி ஒரு தமிழ் வகுப்பைத் தொடங்கியது. பீகிங் அரசு, 1966 முதல் 1983 வரையுள்ள காலத்தில் பத்து மாணவர்களைத் தமிழ் கற்பதற்காக இலங்கைக்கு அனுப்பியது. 1967ஆம் ஆண்டில் சீனாவின் அயல்நாட்டு மொழி வெளியீட்டுத் துறை தமிழில் நூல்களை வெளியிடத்தொடங்கியது. 1978-இல் சீன சமூக அறிவியல் கழகம் அமைக்கப்பட்டது. இவ்வமைப்பு தெற்காசிய நாடுகளின் சமூகம், பண்பாடு, வரலாறு முதலியவற்றைப்பற்றி ஆய்வு நடத்துகின்றது.

1980ஆம் ஆண்டில் பழைய, இன்றைய இலக்கியங்கள் பற்றி ஆய்வு நடத்த, தமிழ் இலக்கிய ஆய்வு வாரியம் அமைக்கப்பட்டது. சீனக் கலைக் களஞ்சியத்திற்காகச் சிலம்பு, திருக்குறள், இராமாயணம் முதலியவை பற்றி, சீன ஆய்வாளர்கள் எழுதியுள்ளனர்.

'நான் தாயகம் திரும்பியவுடன் பீகிங் வானொலிக்குக் கட்டுரை எழுதுவதுடன், தமிழ்நாடு, இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து வரும் தமிழ் அறிஞர்களின் 'நேர்காணல்' நிகழ்ச்சிகளை நடத்துவேன். மேலும் நான் சிறுகதைகளைத் தமிழிலிருந்து சீன மொழியில் மொழிபெயர்க்கப் போவதால் பேச்சுத் தமிழை ஊக்கமாகக் கற்கிறேன்' -என திரு வாங் பாவ் சீ கூறினார். திரு வாங் பாவ் சீ ஆங்கிலத்தைவிட, தமிழில் நன்கு உரையாடுகிறார்.

— செ. இரெ. செயச்சந்திரன்

சத்துணவும் கல்விப் பயனும்

'சத்துணவுத்திட்டத்தின் மூலம் 65இலட்சம் பள்ளிக் குழந்தைகள் பயன்பெறுகின்றனர். இதனால் பள்ளியை இடையில் விட்டுவிடுவோர் எண்ணிக்கை, குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்புகளைச் சார்ந்தவர்களிடையே குறைந்துவிட்டது.

—இட ஒதுக்கீடு கருத்தரங்கில்
மாண்புமிகு கல்வி அமைச்சர்
செ. அரங்கநாயகம்.

குளவி ஒரு பூச்சி

வேட்டச்செந்நாய் கிளைத்தூண் மிச்சில்
குளவி மொய்த்த அழுகற் சின்னீர்
வளையுடைக் கைய ளெம்மொடு உணீஇயர்
(குறுந்தொகை-56)

இப்பாட்டில் குளவி என்பதற்கு மல்லிகைஎன்று உரை கூறப்பட்டுள்ளது. காட்டுச் செந்நாய் மான் முதலிய விலங்குகளைக் கொன்று உண்டு மிச்சமாக விட்ட இறைச்சியில் குளவியான மல்லிகை மொய்த்ததாகக் கூறுவது தவறு. இங்குக் குளவி என்பது பூச்சியைக் குறிக்கும். 'சிம்கார்பட்'(JimCorbett) என்ற மிகச் சிறந்த வேட்டையாளர் புலி தனது உணவான விலங்குகளைக் கொன்றுபோட்ட மிச்ச இறைச்சியில் பெரிய குளவிகள் மொய்த்ததைப் பற்றிக் கூறியுள்ளார். புலி உண்ட மிச்சில் இறைச்சியைத் திரும்பவும் உண்ணவரும்போது இறைச்சியில் மொய்த்திருக்கும் குளவிகளை ஊதித் துரத்திவிட்டு உண்ணும் என்பதை நேரில்கண்டு எழுதியுள்ளார். 'குளவி மொய்த்த அழுகற் சின்னீர்' என்பது ஓர் அரிய இயற்கைச் செய்தியைக் கூறுவதாகும்

—பி. எல். சாமி,
தலைமைப்பதிப்பாசிரியர், அறிவியற்களஞ்சியம்.

தமிழ்ப் பண்பாடு - ஓர் அறிமுகம்

"அலைகடலும் அரசியல் வரம்புகளும் நம்மைப் பிரித்தாலும் உள்ளத்தாலும், உணர்வாலும் நாம் ஒன்றியுள்ளோம். இன்தமிழால் இணைக்கப்பட்டுள்ள நாம் எண்ணத்தால் ஒன்றுகிறோம்". என தமிழ்ப் பல்கலைக் கழக வளர்தமிழ்ப்புலத் தலைவர் திரு மா.சன்முகசுப்பிரமணியம் தமிழ்ப்பண்பாடு - ஓர் அறிமுகம் என்னும் 30-நாள் பயிற்சி வகுப்பை 3-12-83 அன்று துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டது எல்லோரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. ஏழு நாடுகளிலிருந்து வந்திருந்தோரைப் பேராசிரியர் கு.நம்பிஆரூரன் ஏற்ற முறையில் வரவேற்றதோடு, அவர்கள் அனைவரையும் அவையோர்க்கு அறிமுகப்படுத்தினார். முப்பது பயிற்சியாளர்கள் கீழ்க்கண்ட ஏழுநாடுகளிலிருந்து வந்தனர். சிங்கப்பூர்(16), மலேசியா(4),மொரீசசு(3), தென்னாப்பிரிக்கா(4),தாய்லாந்து(1),சீனா(1), மேற்கு செர்மனி(1). டாக்டர் இராசாராம் நன்றி நவின்றார்.

நான்கு கிழமைகள் நடைபெற்ற இப்பயிற்சி வகுப்பில் முதல் இரண்டு கிழமைகளும் பின் நான்காவது கிழமையும் நாற்பத்தைந்து தலைப்புகளில் தமிழக வரலாறு, பண்பாடு, சமூக வாழ்க்கை, சமயம், தத்துவம், தமிழ் மொழி, இலக்கியம், தமிழக நுண்கலைகள் ஆகியவை பற்றி அறிஞர்கள் விரிவுரை நிகழ்த்தினர். அந்தந்தக் கிழமை நிகழ்த்தப்பெறும் விரிவுரைத் தலைப்புகளில் மூன்று தேர்வுகள் நடத்தப்பெற்றன. இவ்வாண்டு, நாள்தோறும் பிற்பகலில் ஏழு விருப்பப் பாடங்கள் தனித்தனியே அவ்வத் துறைப் பேராசிரியர்களால் நடத்தப்பெற்றன.

இச்சொற்பொழிவுகளோடு ஐந்து சிறப்புச் சொற்பொழிவுகளும் நிகழ்த்தப்பெற்றன. பேராசிரியர் மா.சன்முகசுப்பிரமணியம், திரு கா.செ.செல்லமுத்து, இலண்டன் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஆர்.எப்.டைல்கோட், சிகாகோ பல்கலைக் கழகத்திலிருந்து திரு ரிச்சர்ட் டேவிஸ் ஆகிய ஐவரது சிறப்புச் சொற்பொழிவுகள்இடம்பெற்றன.

பயிற்சியின் ஓர் உறுப்பாக மூன்றாவதுகிழமை ஐந்து நாள் பண்பாட்டுச் சுற்றுலா ஒன்றும், ஒரு நாள் சுற்றுலா இரண்டும் ஏற்பாடுசெய்யப்பட்டன. தமிழ்ப் பண்பாட்டின் பல்வேறு பாங்குகளை இச் சுற்றுலாவின்போது பயிற்சியாளர்கள் நேரில் காண முடிந்தது.

(மேலும் செய்திகள் அடுத்த இதழில் வெளிவரும்)

சேரி மொழியும் - செய்யுள் மொழியும்

தொல்காப்பியனார் மொழி வழக்கினைச் சேரி மொழி எனவும், செய்யுள் மொழியெனவும், இரு திறமாகப் பகுத்துக் கூறியுள்ளார். அவற்றுள் சேரி மொழி என்பது கற்றோர் கல்லாதோர் எனும் வேறுபாடின்றி மக்கள் எல்லாருக்கும் தெளிவாகப் பொருள் புலனாகும்படி எளிய சொற்களால் அமைந்த பேச்சு மொழியாகும். செய்யுள் மொழியென்பது ஓரளவு மொழிப் பயிற்சியுடையோர்க்கு மட்டுமே புலனாவதாகும்.

-கிளைமொழியியல் கருத்தரங்கில்
பேராசிரியர் க.வெள்ளைவாரணர்

கிளை மொழியியல் கருத்தரங்கு

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் திசம்பர்12 முதல் 14 வரை நடந்த கிளைமொழியியல் கருத்தரங்கில், கிளைமொழியியல் கோட்பாடுகள்மற்றும் கள ஆய்வு முறைகள், இதுவரை தமிழ்க்கிளைமொழியியலில் நடந்துள்ள ஆய்வுகள் பற்றிய திறனாய்வு, கிளைமொழியியல் ஆய்வில் இனிமேற்கொள்ளவேண்டிய திட்டங்கள் முதலியவை பற்றிய கலந்துரையாடல் நடைபெற்றது. நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்த அறிஞர்கள் ஆய்வுக் கட்டுரைகள் படித்தனர். பேராசிரியர் மு. சன்முகம் பிள்ளை, டாக்டர் பி.பி.மகாபாத்ரா, டாக்டர் நீதிவாணன், டாக்டர் எச்.ஆர். துவா, டாக்டர் ஏ.பி. ஆண்டிரோச்குட்டி, டாக்டர் கோபிநாதன், டாக்டர் ஆதிமுக்கர்சி, மற்றும் பலரும் கலந்து கொண்டனர். தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் வ.அய்.சுப்பிரமணியம் கருத்தரங்கின் துவக்க விழா உரையாற்றினார். பேராசிரியர் க.வெள்ளைவாரணர் கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கினார்.

நகப் பூச்சு

நகத்திற்குச் செந்நிறம் ஊட்டுவது பழங் காலத்திலிருந்து வரும் ஒரு மரபேயாம்.

'குவிமுனை முருக்கின் கூர்நுனை வையெயிற்று
நகைமுக மகளிர் ஊட்டுகிர் கடுக்கும்'
(அகம்.317)

எனவரும் அகநானூற்றுப் பாடலடிகள் செந்நிறக் குழம்பு ஊட்டப்பெற்ற மகளிரின் நகத்தினை முருக்கம்பூவின் கூரிய நுனிக்கு ஒப்பிட்டுப் பேசுவதால் அறியலாகும்.

- பேராசிரியர் மு.சண்முகம்பிள்ளை,
ஓலைச் சுவடித்துறை.

தமிழ்ப் பல்கலைக் கழகச்

செய்தி மலர்

திங்களிதழ்

பதிவெண் 15033/82X7

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 007.
தமிழ்நாடு - இந்தியா.

இ.அ.அ. மட்டும்.

திருமதி புலவர் திலகம்
3/1709, பிச்சாண்டி முதலி சந்து
மானேசியப்பா வீதி
தஞ்சாவூர்

அறிவியல் துளி
வீட்டிற்குள் வெப்பச்சுவர்

நார்பெர்க் காட்கே (Norberg Hodge) என்ற சுவீடிசு பெண்மணி லடாக் வந்தார். அவர் லடாக்கி மொழியைப் பயின்று 3,000 சொற்களைக் கொண்ட லடாக்கி-ஆங்கில அகராதி ஒன்றையும் உருவாக்கினார். லடாக்கின் தலையாய சிக்கல் கடுங்குளிராகும். (-40 டிகிரி) இக் குளிர் காலத்தில், வீட்டு அறையை வெப்பமாகவைத்திருக்கவும் உணவைச் சமைப்பதற்கும் அம்மக்கள் சாண எருவைப் பயன்படுத்தினர். ஆனால், கண் நோய், மூச்சுத்திணறல் நோய் ஆகியவை இதனால் ஏற்பட்டன. இதற்கு என்ன செய்யலாம் என அவர் உகந்த தொழில் நுட்ப வளர்ச்சிக் குழுவைக் கேட்டார். (Appropriate Technology) Development Group) டிராம்பே சுவர் (Trombe wall) அமைப்பை இக்குழு பரிந்துரைத்தது. லடாக் குளிர் மிகுந்த பகுதியெனினும் ஆண்டில் 325 நாள்கள் வெயிலடிக்கும் நாள்களாகவே இருக்கின்றன. வெப்பத்தை உள் வாங்கிப் பாதுகாக்கும் தன்மையையுடைய இச்சுவர்கள் தெற்கு நோக்கிய கண்ணாடிச் சாளரங்களுக்கு எதிராக அமைக்கப்பட்டு, சாளரவழி சூரிய ஆற்றலைப் (Solar Energy) பகலில் உறிஞ்சிப்பாதுகாத்து இரவில் மெல்ல மெல்ல வெப்பத்தை அறைக்குள் விடும். இதனால் அறை வெப்பமாக இருக்கும். தற்போதுள்ள வீடுகளுக்குள்ளேயே இவ்வகைச் சுவர்களைக் கட்டி முடித்து வெற்றியும் பெற்றுள்ளனர். இதற்குத் தேவையான கண்ணாடி மட்டுமே வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யவேண்டியுள்ளது.

நன்றி: Science age, Dec.1983.

எமது இனிய
பொங்கல் வாழ்த்து

தமிழ்ப் பல்கலைக் கழகம்.

பனிக் காலக் குடிநீர்

குளிரேற்றும் பனிக்காலத்தில்காலைப் பொழுதில், நன்கு பழுத்துக் கனிந்த எலுமிச்சம்பழச்சாற்றில் இஞ்சியை முதல் நாளிரவில் ஊறவைத்து அதனைக் காலையில் பருகினர். இதனைச் சீவக சிந்தாமணி,

"பங்க யப்பகைப் பருவம்
(முன்பனிக்காலம்)வந்தென" (2680)
"அழிந்த தீம்பழம்
இஞ்சி ஆர்ந்தநீர்" (2682)
மகிழ்ந்து பருகினார் என்று பாடுகின்றது

புளிப்பும் காரமுங்கூடிப் பனிமூட்டக்காலையில் சுருசுருப்பை ஏற்றும்போலும்.

– கோவை. இளஞ்சேரன்.

அரிய கலைத் திறன் இரண்டு

அரிய கலைத் திறன் மூன்று எனும் பகுதி செய்திமலர் - (2:9) இதழில் வெளிவந்துள்ளது. அது போல அரிய கலைத் திறன் இரண்டு எனும் கூற்றும் உள்ளது. கோயில் சிற்பக் கலைப் பணிக்கு ஒப்புக் கொள்பவர்கள்

தாரமங்கலத்துத் தூண்
தாடிக் கொம்புத் தளம்

ஆகிய இரண்டும் நீங்கலாக வேறு எந்தக் கோயிற் பணிகளையும் செய்து கொடுக்கின்றோம் என்று பேசுவர்.

தாரமங்கலம் திருக்கோயில் முன் மண்டபத் தூணொன்றில் இராமரும் மற்றொருதூணில் வாலியும் அமைக்கப்பட்டுள்ளனர். வாலியிடத்து நம் கண்ணை ஒட்டிப்பார்த்தால் இராமர் தெரிவதில்லை; இராமரிடங் கண் பொருந்தப் பார்த்தால் வாலி தெரிகின்றார். தாடிக்கொம்பு, சவுந்திரராசப் பெருமாள் கோவிலில் அமைந்துள்ள கல்தளத்தில் எவ்வளவு தண்ணீர் விட்டாலும் நிற்பதில்லை.

– இரா. பவுன்துரை, அருங்காட்சியகம்.

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை.
அச்சு: தமிழ்ப் பல்கலைக் கழக அச்சகம், தஞ்சாவூர் - 613 001.